[15th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கிற பள்ளிக்கூடம் அங்கேயே அமராவதியில் இருக்கும். இன்னொரு சைனிக் பள்ளிக் கூடம் தமிழ் நாட்டில் அமைக்கும்போது அதை கொடைக்கானலில் அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : அமராவதி நகரை என்ன காரணத்தைக் கொண்டு, எந்த வசதிகள் இருக்கிறது என்று தேர்ந்தெடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமராவதி நகரிலே நீர்த்தேக்க திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. அதற்கப்புறம் பல கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனுல்தான் அங்கே சைனிக் ஸ்கூல் அமைக்க லாம் என்று சொன்னேம்.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி சைனிக் ஸ்கூல்கள் டேராடூன், நெய்நிடால் போன்ற மலைப்பிரதேச இடங்களில் அமைக்கப்பட்டிருப் பதால், அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு கொடைக்கானலில் அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நடக்கிற சைனிக் ஸ்கூல்கள் எல்லாம் மலைப்பிராந்தியத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற் கில்லை. மலை இல்லாத இடங்களிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது. இன்னொரு சைனிக் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம், அவா. அதை கொடைக்கானலில் அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

SRI R. V. SWAMINATHAN : Sir, may I know whether the Government have taken any definite decision with regard to the starting of another Sainik school and if so, when the school will be started?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say that the Government have taken a definite decision to have a Sainik school. But the Government propose to consider it and if that comes to fruition, that will be at Kodaikanal.

திரு. வி. எஸ். எஸ். மணி : அமராவதி நகரம் மலை அடிவாரத்தில் இருப்பதால் மலேரியல் ப்ளேஸ் என்று சொல்லப்படுகிறது. அதைப் பரிசீலனை செய்து மாற்றுவதற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை. சுகாதாரத்திற்குப் பழுது இல்லை. அமராவதியில் இருக்கிற சைனிக் பள்ளிக்கூடம் இப்போது அங்கே படிக்கிற பிள்ளைகளுக்குப் பொருத்தமாக இருக்கிறது.

Enhancement of dearness allowance to Government employees

* 235 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to enhance the dearness allowance of the employees of the State Government from 1st January 1965?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. The Government have decided to sanction the dearness allowance to State Government employees, local body employees and teachers

in aided institutions at enhanced rates with effect from 1st April 1965, i.e., pay for March 1965 due on 1st April 1965 as detailed below :—

Pay range.	*Rates of dearness allowance.*
	RS.
Up to Rs. 89	28.00
Rs. 90 to Rs. 149	42.00
Rs. 150 to Rs. 209	54.00
Rs. 210 to Rs. 399	66.00
Rs. 400 to Rs. 599	70.00
Rs. 600 to Rs. 799	80.00
Rs. 800 to Rs. 999	85.00
Rs. 1,000 to Rs. 1,200	90.00

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது பஞ்சப்படியை உயர்த்தினது வரவேற்கத்தக்கது என்றாலும் வீட்டு வாடகை (ஹௌஸ் ரென்ட் அலவன்ஸ்), "ஸிடி காம்பன்ஸேடரி அலவன்ஸ்" என்கிறவகைகளில் எந்த மாறுதலும் செய்யப்படாததால் அவைகளில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிற காரணத்தால் இதையும் மாற்றுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றைக் கொடுக்கிறபோது இன்னொன்றைக் கொடுக்கவில்லை என்று சொல்வது சகஜம் தான். கனம் உறுப்பினர் சொல்வது மத்திய அரசாங்கத்தை ஒப்பிட்டு அதற்குச் சமமாக நாம் கொடுக்கவேண்டும் என்பது. அதைப்பற்றி நான் முன்பு விளக்கி இருக்கிறேன். எல்லாவற்றையும் அதிகரித்துக் கொண்டே போக முடியாது. பஞ்சப்படியைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கத்தார் கொடுக்கும் அளவில் கொடுக்கிறோம். சில சமயங்களில் மத்திய சர்க்காரை விட நம் ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். கனம் உறுப்பினர் சொல்வதுபோல் அரசாங்கம் இப்போது செய்வதற்கு இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : நெருக்கடியை உத்தேசித்து பிடிக்கப்பட்ட கட்டாய டெபாஸிட் பணத்தை இனி பிடிக்காமல் நிறுத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் பஞ்சப்படியை உயர்த்துவது என்று முடிவு செய்ததால் இப்போது அதை நிறுத்துவதாக இல்லை.

திரு. செ. மாதவன் : அகவிலைப் படியை அடிப்படை சம்பளத்தோடு இணைக்க சர்க்கார் பரிசீலிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். இப்போது பஞ்சப்படியை உயர்த்திக்கொண்டே வருகிறோம். பொதுவாக எந்த அளவுக்கு பஞ்சப்படியை அடிப்படை சம்பளத்தோடு இணைக்க வேண்டுமென்பது பே கமிஷன் நியமித்து அவர்கள் அப்போது யோசிக்க வேண்டிய விஷயம். முன் நியமித்த பே கமிஷன் அப்போது உள்ள நிலைமைக்கு ஒத்தபடி சம்பள விகிதத்தை மாற்றியிருக்கிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : அகவிலைப் படி நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களுக்கும், ப்ளேன்ஸில் உள்ளதைப்போல் போட்டிருக்கிறார்கள். நீலகிரிபோன்ற மலைப்பிரதேசங்களில் காஸ்ட் ஆப் லிவிங் அதிகமாக

[15th March 1965

இருக்கிற காரணத்தால், அகவிலைப் படியை மாற்றி அமைக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அகவிலைப் படியை மாற்ற உத்தேசம் இல்லை. மலைப் பிரதேசங்களில் விசேஷ சலுகை காட்டவேண்டுமென்றால் அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : அப்படி என்றால் ஹில் அலவன்ஸ் சில பேர்களுக்குக் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதே, அதையாவது கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் நான் முன்பு குறிப்பிட்டேன்.

நகைத் தொழிலாளர்கள்

***236 கே.—திரு. எம். எஸ். மணி :**
திரு. வை. சங்கரன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட நகைத் தொழிலாளர்கள் நம் மாநிலத்தில் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எவ்வளவு பேருக்கு அரசினர் கடன் உதவி அளித்துள்ளனர்?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No precise information is avaiable.

(*b*) Up to 31st January 1965, 13,101 goldsmiths have been given loan assistance.

திரு. எம். எஸ். மணி : பாதிக்கப்பட்ட நகை தொழிலாளர்களில், மண் அரிப்பு தொழில் வேலைக்கு அரசினர் கடன் உதவி கிடைப்பதில்லை. அதை மாற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது இருக்கின்ற விதிகளின் படி, தங்கத்தில் வேலை செய்கிறேன் என்று மனுச் செய்த பிறகு அவர்களுக்குக் கடன் உதவி கிடையாது. கடன் வாங்கியவர்களுக்கு தங்கத்தில் வேலை செய்வதற்கு அனுமதி கொடுக்க முடியாது. இதனால் சலுகை கொடுக்காமல் இருக்கிறது. இதைச் சரியாக அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. வை. சங்கரன் : இப்போது கடன் வசதி பெறுகிறவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், லக்ஷக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டு அதில் 10 சத வீதம் பேருக்குத்தான் கடன் வசதி கிடைக்கிறது. வேலை இழந்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால், அந்தந்த மாவட்டத்தில் தொழிலதிபர்களை விட்டு இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க போதிய அளவு சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதிக்கப்பட்டவர்கள் என்று சர்க்காருக்கு மனுச்செய்து கொண்டவர்கள் 54,113 பேர்கள். இதனால் லக்ஷக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது ஆரம்பத்திலேயே சரியாக இருக்காது. இந்த 54,113 பேரில் தங்க வேலை செய்யவேண்டும் என்று மனுச்செய்தவர்கள், 22,750 பேர்கள். எஞ்சி இருக்கிறவர்கள் தங்களுக்கு நிலம் வேண்டும், கோவாபரேடிவ் சொஸைடியில் சேரவேண்டும், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜில் பதிவு செய்து கொண்டு வேலை கொடுக்கவேண்டும், லோன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டவர்கள். இவ்வாறு கேட்டுக் கொண்டவர்களில் லோன் வேண்டினவர் 26,000 பேர்கள். இந்த 26,000 பேர்களின் மனுக்களை நாங்கள் பரிசீலித்ததில் 13,101 பேருக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்